புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்

38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,

Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 PRGI.No.PNTAM/26/A7529 GSTIN: 33KXSPK6994Q1ZX

நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.

No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061

Cell: 7810068421,9488420449

neethiPress@ gmail.com

ஆசிரியர்: K.சபியுல்லா

மலர்: 02 | இதழ்: 114 | 30-10-2026 | வெள்ளி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி

Volum 02 | Issue: 114 | 30-10-2026 | Friday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

“ஜனநாயகத்தை காக்க ஒன்றிணைந்து நடப்போம்” நவ.1 பேரணியில் இணைய ராகுல் காந்தி அழைப்பு

புதுடெல்லி: அக்.30–

நவ. 1ம் தேதி நடைபெற உள்ள டெல்லி ராம் லீலா பேரணி, ஜனநாயகத்தைக் காக்கும் பேரணி என தெரிவித்துள்ள ராகுல் காந்தி இதில் இணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் மூத்த தலைவருமான ராகுல் காந்தி வெளியிட்டுள்ள வீடியோவில், “டெல்லி ராம்லீலா பேரணி ஜனநாயகத்தைக் காக்கவும், வாக்குத் திருட்டை தடுக்கவும், அரசியலமைப்பைக் காக்கவுமான பேரணி. இது எந்த ஒரு அரசியல் கட்சிக்குமான பேரணி அல்ல. இது இந்தியாவின் ஆன்மாவுக்கான பேரணி.

நரேந்திர மோடி, அமித் ஷா, ஞானேஷ் குமார் மீது அதிருப்தியடைந்த அனைவரும் வாருங்கள்; ஜனநாயகத்தைக் காப்பாற்றி, அரசியலமைப்பை பாதுகாக்க விரும்புபவர்கள் அனைவரும் வாருங்கள். அதற்கான ஒரே போராட்டம்; தேசத்தின் போராட்டம் இது.

காவல்துறையைப் பற்றியோ, தடியடியைப் பற்றியோ கவலைப் படாதீர்கள். தங்கள் தந்திரங்களைச் செயல்படுத்தும் துணிச்சல் பாஜகவுக்கு இருக்காது.

எங்களோடு இணைந்து நடைபயணம் மேற்கொள்ளுங்கள். இந்திய அரசியலமைப்பைப் பாதுகாக்கவும், இந்திய தேசத்தைக் காக்கவும் நாம் ஒன்றிணைந்து நடப்போம். எதற்கும் அஞ்சத் தேவையில்லை.

அனைத்து மாணவர் அமைப்புகளையும் நான் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் அரசியல் சார்பு எதுவாக இருந்தாலும் சரி, இந்தியா தாக்குதலுக்கு உள்ளாகிறது, நீங்கள் தாக்குதலுக்கு உள்ளாகிறீர்கள், உங்கள் கருத்துக்களும் சிந்தனை முறைகளும் தாக்குதலுக்கு உள்ளாகின்றன என்று நீங்கள் உணர்ந்தால் எங்களுடன் வந்து இணையுங்கள்.

இது ஒரு மிகச்சிறப்பான நடைபயணமாக அமையும். இது இந்த நாட்டின் ஆன்மாவைக் காப்பதற்கான நடைபயணம். உங்கள் அனைவரையும் அங்கே சந்திக்கும் ஆவலுடன் நான் காத்திருக்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் கோப்பை நிறைவு பரிசளிப்பு விழா: விஜய்க்கு உற்சாக வரவேற்பு...



சென்னை, அக்.30

நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெறும் ’முதலமைச்சர் கோப்பை’ பரிசளிப்பு நிகழ்ச்சிக்கு வந்த முதல்அமைச்சர் விஜய்க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது..தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஆண்டுதோறும் முதல் அமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை தமிழ்நாடு முழுவதும் மாவட்ட மண்டல மாநில அளவில் நடத்திவருகிறது.விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் நடத்தப்படும் முதல்அமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டியானது, அனைத்து தரப்பினரையும் விளையாட்டில் ஈடுபட செய்யும் மிகச்சிறந்த முயற்சியாகும். இதன் மூலம் திறமையான விளையாட்டு வீரர்களை பாராட்டி, அவர்களை ஊக்குவித்து, உரிய அங்கீகாரம் மற்றும் பரிசுகளை வழங்குவது,இந்த போட்டிகளின் முக்கிய நோக்கமாகும்.. முதலமைச்சர் கோப்பை இதன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மற்றும் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திண்டுக்கல், அரியலூர், நாமக்கல், திருவண்ணாமலை மற்றும் ராமநாதபுரம் ஆகிய நகரங்களில் அக். 15ம் தேதி முதல் நடத்தப்பட்ட மாநில அளவிலான ‘முதலமைச்சர் கோப்பை’ போட்டிகளில் பங்கேற்றனர்.. நேரு விளையாட்டரங்கம்மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில் நேற்று (வியாழக் கிழமை) சென்னை நேரு விளையாட்டரங்கில் வெற்றி பெற்றவர்களுக்கு முதலமைச்சர் கோப்பை நிறைவு விழா தொடங்கி நடைபெற்று வருகிறது. முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் சென்னை மாவட்ட அணி ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றி கோப்பையை வென்றுள்ளது. .சாம்பியன் பட்டம்இந்நிலையில் சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் கோலாகலமாக நடைபெற்று வரும் பரிசளிப்பு விழாவில், முதல்அமைச்சர் விஜய் நேரில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கும் சாம்பியன் பட்டம் வென்ற சென்னை மாவட்ட அணிக்கும் கோப்பைகளையும் பரிசுகளையும் வழங்கி வாழ்த்தி வருகிறார்.இந்நிகழ்ச்சியில், முதல் அமைச்சர் விஜய், விளையாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா உள்ளிட்ட அமைச்சர்கள் பலர் கலந்துகொண்டுள்ளனர். தற்போது முதலமைச்சர் கோப்பை 2026 நிறைவு விழாவில் நடந்து வரும் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளை முதல் அமைச்சர் விஜய் கண்டு ரசித்து வருகிறார்.

தமிழக சிறைத் துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் பணியிட மாற்றம்

சென்னை: அக்.30–

தமிழக சிறைத் துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். புதிய சிறைத் துறை டிஜிபியாக சங்கர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். தேனி மாவட்ட சிறையில் இருந்து 17 கைதிகள் தப்பியோடி, பின்னர் அனைவரும் பிடிபட்ட நிலையில், தமிழக சிறைத் துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, புதிய சிறைத் துறை டிஜிபியாக சங்கர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். தற்போது சந்தீப் ராய் ரத்தோர் மின்வாரிய லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தேனி மாவட்ட சிறையில் இருந்து கடந்த 26ம் தேதி இரவு அங்கிருந்த போலீஸாரை தாக்கி 17 பேர் தப்பியோடினர். தேனியில் இருந்து தப்பிய 17 கைதிகளும் 36 மணி நேர தேடுதல் வேட்டைக்கு பிறகு பிடிபட்டனர்.

அதேபோல புழல் சிறையில் இருந்தும் சில நாட்களுக்கு முன்பு இரு கைதிகள் தப்பியோடினர். இந்த இரு சம்பவங்களையும் எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றன. இதனையடுத்து, தற்போது சிறைத் துறை டிஜிபி பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வழக்கு ரத்து கோரிய அன்பில் மகேஸ் மனு மீதான விசாரணையை நவ.10க்கு தள்ளிவைத்தது ஐகோர்ட்

சென்னை: அக்.30–

ரூ.100 கோடி லஞ்சம் பெற்றதாக பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்யக் கோரி அன்பில் மகேஸ் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை நவம்பர் 10 ஆம் தேதிக்கு சென்னை உயர் நீதிமன்றம் தள்ளி வைத்துள்ளது.

தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் பெற்றுத் தருவதாகக் கூறி, நூறு கோடி ரூபாய் லஞ்சம் பெற்றதாக பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்யக் கோரி திமுக முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் தாக்கல் செய்த மனு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி வி.லட்சுமிநாராயணன் முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது மத்திய குற்றப்பிரிவு போலீஸார் தரப்பில் ஆஜாரன தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஜான் சத்யன், ‘மனுதாரர் அன்பில் மகேஸ் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி கோரி சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தலைமறைவாக இருந்த முன்னாள் எம்எல்ஏ முத்துகுமார் சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று சரண் அடைந்திருக்கிறார்’ என தெரிவித்தார்.

அன்பில் மகேஸ் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், ‘அன்பில் மகேஸின் முன்ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து இந்த நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த பின், அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து ஆலோசித்துக் கொண்டிருந்த போது, 40க்கும் மேற்பட்ட போலீஸார், தனது அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்து அன்பில் மகேஸை கைது செய்துள்ளனர்’ என புகார் தெரிவித்தார்.

மேலும், ‘தமிழகத்தில் போலீஸ் ராஜ்ஜியம் நடக்கிறதா? அரசியல் சாசனத்துக்கு விரோதமாக போலீஸார் நடந்து கொண்டுள்ளது’ என குற்றம்சாட்டினார்.

அதற்கு காவல் துறை தரப்பில், ‘மூத்த வழக்கறிஞர் அலுவலகத்தின் வெளியே ஒன்றரை மணி காத்திருந்துதான் அன்பில் மகேஸை கைது செய்தோம். வழக்கறிஞரின் அலுவலகத்தினுள் கைது செய்ததாக கூறப்படும் குற்றச்சாட்டை சிறப்பு நீதிமன்றம் நிராகரித்துள்ளது’ என்று விளக்கம் அளிக்கப்பட்டது.

இதையடுத்து, வழக்கை ரத்து செய்யக் கோரி அன்பில் மகேஸ் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை நவம்பர் 10ஆம் தேதிக்கு நீதிபதி லட்சுமி நாராயணன் தள்ளிவைத்துள்ளார்.

தொல். திருமாவளவன், திருப்பூர் காங்கிரஸ் கமிட்டி பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்ட எம்.சாதிக் அவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தார்...



திருப்பூர். அக்.30–

திருப்பூர் மாநகர மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள எம். சாதிக் அவர்களுக்கு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்களின் அரசியல் பணி சிறக்கவும், மக்கள் நலப் பணிகள் மென்மேலும் வளரவும், சமூக நல்லிணக்கமும் மதச்சார்பற்ற ஒற்றுமையும் தங்களின் பணியால் வலுப்பெறவும் வாழ்த்துகிறோம்!

சமத்துவம் காப்போம்!

சமூகநீதி வென்றிட உழைப்போம்!

மக்கள் நலன் காத்திட ஒன்றிணைவோம்!

என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் வாழ்த்துக்கள் தெரிவித்தார்...

சிறப்பு ரயில்களுக்கான தீபாவளி முன்பதிவு டிக்கெட் 10 நிமிடத்தில் விற்றுத் தீர்ந்தன

சென்னை: அக்.30–

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, சிறப்பு ரயில்களுக்கான முன்பதிவு டிக்கெட்டுகள் 10 நிமிடங்களிலேயே விற்றுத் தீர்ந்தன. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கூட்ட நெரிசலை தவிர்ப்பதற்காகவும் பயணிகள் வசதிக்காகவும் சென்னை சென்ட்ரல் போத்தனூர் சென்னை சென்ட்ரல், தாம்பரம் நாகர்கோவில் தாம்பரம், சென்னை சென்ட்ரல் திருவனந்தபுரம் வடக்கு, மதுரை தாம்பரம் ஆகிய வழித்தடங்களில் சிறப்பு ரயில்களை அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, நவம்பர் 6ம் தேதி இரவு 11.55 மணிக்கு சென்னை சென்ட்ரலில் இருந்து புறப்படும் சென்னை சென்ட்ரல் போத்தனூர் எக்ஸ்பிரஸ் சிறப்பு ரயில் (06023), மறுநாள் காலை 09.15 மணிக்கு கோயம்புத்தூர் போத்தனூர் ரயில் நிலையத்தை சென்றடையும்.

மறுமார்க்கத்தில், நவம்பர் 9ம் தேதி இரவு 11.30 மணிக்கு போத்தனூரில் இருந்து புறப்படும் போத்தனூர் சென்னை சென்ட்ரல் எக்ஸ்பிரஸ் சிறப்பு ரயில் (06024) மறுநாள் காலை 9.35 மணிக்கு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் வந்து சேரும். இந்த சிறப்பு ரயில்கள், பெரம்பூர், திருவள்ளூர், அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட்டை, சேலம், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய ரயில் நிலையங்களில் நின்று செல்லும். நவம்பர் 6ம் தேதி இரவு 11.55 மணிக்கு தாம்பரத்தில் இருந்து புறப்படும் தாம்பரம் நாகர்கோவில் எக்ஸ்பிரஸ் சிறப்பு ரயில் (06153) மறுநாள் பிற்பகல் 3.30 மணிக்கு நாகர்கோவில் ரயில் நிலையத்தை சென்றடையும்.

மறுமார்க்கத்தில், நவம்பர் 9ம் தேதி இரவு 9 மணிக்கு நாகர்கோவில் இருந்து புறப்படும் நாகர்கோவில் தாம்பரம் எக்ஸ்பிரஸ் சிறப்பு ரயில் (06154), மறுநாள் காலை 11.30 மணிக்கு தாம்பரம் ரயில் நிலையம் வந்து சேரும். இந்த சிறப்பு ரயில்கள், செங்கல்பட்டு, விழுப்புரம், சிதம்பரம், சீர்காழி, மயிலாடுதுறை, கும்பகோணம், பாபநாசம், தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி, திருநெல்வேலி, வள்ளியூர் உள்ளிட்ட ரயில் நிலையங்களில் நின்றுச் செல்லும். அக்டோபர் 30ம் தேதி இரவு 11.50 மணிக்கு சென்னை சென்ட்ரலில் இருந்து புறப்படும் சென்னை சென்ட்ரல் திருவனந்தபுரம் வடக்கு எக்ஸ்பிரஸ் சிறப்பு ரயில் (06133), மறுநாள் மாலை 6.45 மணிக்கு திருவனந்தபுரம் வடக்கு ரயில் நிலையத்தை சென்றடையும்.

நவம்பர் 1ம் தேதி இரவு 8.30 மணிக்கு மதுரையில் இருந்து புறப்படும் மதுரை தாம்பரம் சூப்பர்ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ் சிறப்பு ரயில் (06188), மறுநாள் அதிகாலை 4.15 மணிக்கு தாம்பரம் ரயில் நிலையம் வந்து சேரும். இந்த சிறப்பு ரயில், திண்டுக்கல், திருச்சி, விருத்தாச்சலம், விழுப்புரம், செங்கல்பட்டு ரயில் நிலையங்களில் நின்றுச் செல்லும். இந்த சிறப்பு ரயில்களுக்கான முன்பதிவு இன்று காலை 8 மணிக்கு துவங்கியது. சுமர் 10 நிமிடங்களிலேயே டிக்கெட்டுகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்தன. ‘‘கூடுதல் சிறப்பு ரயில்கள் இயக்கவேண்டும்’ என்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

லட்சிய ஜனநாயக கட்சியின் சார்பில் திருப்பூர் பழைய பேருந்து நிலையம் அருகில் அன்னதான விழா,

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின்119வது ஜெயந்தி விழா!!

திருப்பூர், அக்டோபர்30

முத்துராமலிங்க தேவரின் அவர்களின் திரு .உருவப்படத்திற்கு லட்சிய ஜனநாயக கட்சியின் தெற்கு மாவட்ட செயலாளர் செந்தில் வாண்டையார் தலைமையில்,மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது..

சிறப்பு அழைப்பாளராக திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பாலமுருகன், பல்லடம் தெற்கு சட்டமன்ற தொகுதி துணைச்செயலாளர் சுதாகர், ராயல் லட்சுமணன், லட்சிய ஜனநாயக கட்சியின் அன்னதான விழாவை துவக்கி வைத்தார்...

லட்சிய ஜனநாயகக் கட்சியின் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் செந்தில் வாண்டையார், அவர்களின் தலைமையில் தேவர் ஜெயந்தி விழாவில் திருப்பூர் தெற்கு மாவட்டத்தின் சார் பாகக். தெற்கு மாவட்ட மகளிர் அணி செயலாளர், செ. தயா சாந்தி. தெற்கு மாவட்டத் துணைச் செயலாளர் அருண், தொழிலாளர் அணி செயலாளர் நீலகண்டன், விளம்பர பிரிவு அணி செயலாளர் எம்.எம் .சரவணன், தொண்டர் அணி துணைச் செயலாளர் பாண்டித்துரை,

தொழிலாளர் அணி துணை செயலாளர் மாரியப்பன், சிவ சண்முக டேனியல் முருங்கம்பாளையம் பகுதி கழகச் செயலாளர். தெற்கு சட்டமன்ற தொகுதி தொண்டர் அணி துணைச் செயலாளர் சக்தி, தெற்கு சட்டமன்றத் தொகுதி மகளிர் அணி துணைச் செயலாளர் சித்ரா, வீரபாண்டி பகுதி கழக மகளிர் அணிசெயலாளர் வெங்கடேஸ்வரி , முத்தனம் பாளையம் மகளிர் அணி பகுதி கழகச் செயலாளர் மகேஸ்வரி, ஆண்டிபாளையம் மகளிர் அணி பகுதி கழக செயலாளர் பூமதி, கருவம்பாளையம் மகளிர் அணி பகுதி செயலாளர் செல்வராணி, மோகனசுந்தராம்பாள்,தெற்கு மாவட்ட மகளிர் அணி துணை செயலாளர் 57 ஆவது வார்டு செயலாளர் குமார், திருப்பூர் தெற்கு மாவட்ட தொகுதி பகுதி வார்டு கிளை கழக உறுப்பினர்கள் பழைய பேருந்து நிலையம் அருகில் முத்துராமலிங்க தேவரின் திரு உருவபடத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்பு பேருந்து நிலையத்திற்கு வருகை தந்த அனைத்து பொது மக்களுக்கும் அன்னதான விழா நடைபெற்றது. நிர்வாகிகள்அனைவரும் கலந்து கொண்டனர்...

கூட்டுறவு அங்காடிகளில் ரூ.200க்கு 10 பொருட்கள் அடங்கிய மளிகை தொகுப்பு நாளை தொடக்கி வாய்ப்பு

சென்னை: அக்.30

கூட்டுறவு அங்காடிகளில் ரூ.200க்கு 10 பொருட்கள் அடங்கிய மளிகை தொகுப்பு சென்னையில் நாளை முதல் விற்பனை செய்ய ஏற்பாடு; கடலை பருப்பு, பாசிப் பருப்பு, உளுந்தம்பருப்பு, மிளகாய், தனியா, பூண்டு, புளி, கடுகு, சீரகம், சோம்பு உள்ளிட்டவற்றை வழங்கபடும்; தீபாவளி பண்டிகை நெருங்கும் நிலையில் மளிகைத் தொகுப்பு கூட்டுறவு அங்காடிகளில் நாளை தொடங்கப்படும்.

ஜம்ப்ரோப் தேசியப் போட்டியில் கள்ளக்குறிச்சி மாணவர்கள் சாதனை!

தங்கம், வெள்ளிப் பதக்கங்கள் வென்று தேசிய அளவில் இரண்டாம் இடம் பிடித்து அசத்தல்

கள்ளக்குறிச்சி அக்,30

உத்தரப்பிரதேச மாநிலம் மீரட்டில் நடைபெற்ற தேசிய அளவிலான ஜம்ப்ரோப் போட்டியில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

டெல்லி, ஹரியானா, உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, டேராடூன், மேற்கு வங்காளம், உத்தரகாண்ட், தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பள்ளிகளிலிருந்து 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்போட்டியில் பங்கேற்றனர். இதில், தமிழ்நாடு ஜம்ப்ரோப் அசோசியேஷன் சார்பில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 8 மாணவர்கள் கலந்து கொண்டனர். 14 மற்றும் 19 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.

இதில், 14 வயதுக்குட்பட்டோர் பிரிவில் பங்கேற்ற மோஹித் ஸ்ரீனிவாசா, ஸ்பீடு ஸ்பிரிண்ட் பிரிவில் தங்கப் பதக்கமும், எண்டூரன்ஸ் பிரிவில் பிரத்திமனா வெள்ளிப் பதக்கமும் வென்றனர். மேலும், 14 வயதுக்குட்பட்டோருக்கான ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் பிரிவில் தேசிய அளவில் இரண்டாம் இடத்தைப் பிடித்து கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்தனர்.

போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களைத் தமிழ்நாடு ஜம்ப்ரோப் அசோசியேஷன் தலைமைச் செயல் அலுவலர் திருமலை தமிழரசன், மாநிலச் செயலாளர் சுகுமாறன், பயிற்சியாளர்கள் சூரியமூர்த்தி, தமிழ்ச்செல்வன் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஜம்ப்ரோப்அசோசியேஷன் செயலாளர் குசேலன் ஆகியோர் பாராட்டினர். மேலும், பெற்றோர்கள், பொதுமக்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் மாணவர்களுக்குத் தங்களதுவாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் ஒருங்கிணைந்த கோவை மாவட்டப் பொதுக்குழுக் கூட்டம்

கோவை அக்:30

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் ஒருங்கிணைந்த கோவை மாவட்டப் பொதுக்குழுக் கூட்டம்,கோவை சிவானந்தா காலனியில் நடைபெற்றது.இந்த கூட்டத்திற்கு ஒருங்கிணைந்த கோவை மாவட்டத் தலைவர் கோவை எஸ்.மஹேந்திரன் தலைமை வகித்தார்.மாநிலத் துணைத் தலைவர் பிரின்ஸ் சுந்தர் அண்ணாச்சி,கொங்கு மண்டலத் தலைவர் ராஜேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு கூட்டத்தைச் சிறப்பித்தனர்.மாவட்டச் செயலாளர் பழனிச்சாமி, மாவட்டப் பொருளாளர் ஐடி சரவணன்,மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.ஜி.மணிகண்டன்,மாவட்ட மகளிரணி அமைப்பாளர் தெய்வநாயகி,மாநிலச் செயற்குழு உறுப்பினர் டால்பின் ராஜா,மாவட்ட இணைச் செயலாளர் செந்தில்குமார்,மாவட்டத் துணைத் தலைவர் ஜெகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக இரத்தினபுரி வணிகர்கள் சங்கத் தலைவர் ஆர்.கோபாலகிருஷ்ணன்,செயலாளர் எஸ்.பி.தனசேகர்,பொருளாளர் வி.ஜெயசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.இக் கூட்டத்தில் ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட கோவை எஸ்.மஹேந்திரனுக்கு வணிகர் சங்க நிர்வாகிகள் சால்வைகள் அணிவித்து பூங்கொத்துகள் கொடுத்து வாழ்த்துக்களை தெரிவித்தனர். இதுகுறித்து அவர் கூறுகையில்மத்திய தலைவராக இருந்த மாணிக்கம் வரவு செலவு கணக்குகளில் சரியாக இல்லாததாலும், மாநில தலைவர் குறித்து அவதூறு பரப்பி வந்ததாகவும், அதன் காரணமாக நிர்வாகிகளின் ஏகோபத்திய ஆதரவுடன் அவரை சங்கத்திலிருந்து மாநில தலைமை நீக்கி உள்ளதாகவும், தற்போது மத்தியம்,வடக்கு தெற்கு ஆகிய மாவட்டங்களை இணைத்து ஒருங்கிணைந்த கோவை மாவட்டமாக உருவாக்கியுள்ளதாகவும்,மேலும் கோவை போலீஸ் கமிஷ்னரிடம் மாணிக்கம் குறித்து புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இக்கூட்டத்தில் கோவை மத்திய மாவட்ட தலைவராக காரத்தே சுரேஷ்,செயலாளராக கண்ணப்பன்,பொருளாளராக அக்பர் பாஷா,துணை தலைவர்களாக நாகராஜ்,சுப்புராஜ்,துணை செயலாளர்களாக அஞ்சுநகர் மணி,பாலகிருஷ்ணன், இளைஞர் அணி செயலாளராக கௌரி சங்கர்,கௌரவ தலைவராக வேல்முருகன் உள்ளிட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.அதேபோல,பெரியநாயக்கன்பாளையம் கிளைச்சங்கத்தின் தலைவராக சவரிமுத்து,கணபதி கிளைச்சங்கத் தலைவராக கோபாலகிருஷ்ணன்,பாரதிநகர் கிளைச்சங்கத் தலைவராக ராகுல்,வடவள்ளி கிளைச்சங்கத் தலைவியாக மஞ்சுளா மற்றும் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன.

வேளாண் சந்தை தொடக்கம். ஈரோடு ஆட்சியர் அறிக்கை.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 2026 2027ஆம் ஆண்டு வேளாண் நிதிநிலை அறிக்கையின் அறிவிப்பு எண்.59ன்படி இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கவும் நுகர்வோர்களுக்கு நஞ்சில்லா விளைபொருட்களை

வழங்கவும் அறிவிப்பு செய்துள்ளார்கள் அரசு அதனடிப்படையில், இயற்கை வேளாண்மை செய்யும் (Organic Farming) விவசாயிகள் உழவர் சந்தைகளில் இயற்கை வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்ய அரசாணை பெறப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் சம்பத்நகர், பெரியார் நகர், கோபிசெட்டிபாளையம், பெருந்துறை, சத்தியமங்கலம் மற்றும் தாளவாடி ஆகிய ஆறு இடங்களில் இயங்கி வரும் உழவர் சந்தைகளிலும் வரும் 01.11.2026 ஞாயிற்றுக்கிழமை முதல் இயற்கை வேளாண் விளைபொருட்களுக்கான சந்தை தொடங்கப்பட உள்ளது. வாரந்தோறும் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் இயற்கை வேளாண் சந்தை நடைபெறும். இந்த நல்ல வாய்ப்பினை இயற்கை வேளாண்மை மேற்கொள்ளும் விவசாயிகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் முழுமையாக பயன்படுத்தி கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இயற்கை வேளாண் விளைபொருட்களுக்கான சந்தையானது உழவர் சந்தை செயல்படும் அதே நேரத்தில் அதிகாலை 04.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை செயல்படும். இயற்கை வேளாண்மை விளைபொருட்களை விற்பனை செய்யும் விவசாயிகள் விதைச்சான்று மற்றும் உயிர்ம சான்றளிப்பு துறை மூலம் வழங்கப்படும் இயற்கை விவசாயிகளுக்கான சான்று பெற்றிருக்க வேண்டும். விற்பனை செய்ய விருப்பமுள்ள இயற்கை விவசாயிகள் அருகில் உள்ள உழவர் சந்தைகளில் விண்ணப்பித்து அதற்கான அடையாள அட்டை பெற்றுக்கொண்டு தங்களது இயற்கை விளைபொருட்களை விற்பனை செய்யலாம் மேலும், கூடுதல் விவரங்களுக்கு திருமதி.த.கலையரசி 96777 32229, (சம்பத்நகர், பெரியார்நகர்) திரு.ம.கண்ணன் 9944154563, (பெருந்துறை, கோபிசெட்டிபாளையம்) திருமதி.எஸ்.கனிமொழி 8144528873 (சத்தியமங்கலம், தாளவாடி) ஆகிய வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அம்பாசமுத்திரம் இடைத்தேர்தலில் போட்டியிடப்போவதாக நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவிப்பு!!

அம்பாசமுத்திரம் இடைத்தேர்தலில் நான் போட்டியிடுகிறேன் என நாதக ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவித்துள்ளார். எல்லா சாதிக்குமான பொது வேட்பாளர் நான்; உறவுகள் வேறு, அரசியல் நிலைப்பாடுகள் என்பது வேறு; நான் எப்போதுமே பொது வேட்பாளர் என சீமான் கருத்து தெரிவித்தார்

இன்ஸ்டாகிராம் மூலம் பெண்ணாக பேசி ரூ.10 லட்சம், 25 சவரன் நகை மோசடி -வாலிபர் கைது

கிருஷ்ணகிரி. அக்.30–

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பார்வதி நகரை சேர்ந்தவரிடம் சுமார் 6 மாதங்களுக்கு முன்பு சமூக வலைதளமான (Instagram) மூலம் பிரியா என்ற பெயரில் அறிமுகமாகி, அவரிடம் காதலிப்பதாகக் கூறி ஆசைவார்த்தைகள் பேசியுள்ளார். பின்னர், தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட மற்றொரு நபர், பிரியாவின் தம்பி அபி என அறிமுகப்படுத்திக் கொண்டு, குபேந்திரனின் வீட்டில் சில பூஜைகள் செய்ய வேண்டும் எனக் கூறி பூஜைகள் செய்வது போல் நாடகமாடி, ரூ.10,00,000 பணம் மற்றும் 25 சவரன் தங்க நகைகளை மோசடி செய்துள்ளார்.

இது சம்பந்தமாக கடந்த 25.10.2026ம் தேதி ஒசூர் நகர காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில், பெண்ணை போல் பேசி மோசடி சம்பவத்தில் ஈடுபட்டது கிருஷ்ணகிரி, கொத்தபேட்டா காலனியைச் சேர்ந்த சிவசாரதி (21), த/பெ. நித்யராஜ் என்பது தெரியவந்தது. இதையடுத்து, சிவசாரதியை இன்று 28.10.2026ம் தேதி கைது செய்து நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார்

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஜம்புதுரைக்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட காமலாபுரத்தில் ஊராட்சி ஒன்றிய பொது நிதி திட்டம் (20262027)ன் கீழ், ரூ.06.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் நீர்மூழ்கிக் குழாய்ப் பம்பு அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வரும் பணிகள் குறித்து (29.10.2026) மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்காமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் நிலக்கோட்டை வட்டாட்சியர் திரு.ராமசாமி அவர்கள், நிலக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. சுரேஷ் அவர்கள், திரு. காமராஜ் அவர்கள், உதவிப் பொறியாளர்கள் திருமதி ராஜேஸ்வரி அவர்கள், திரு. செல்வகுமார் அவர்கள் உட்பட பலர் உள்ளனர்.

சேலத்தில் டாஸ்மாக் கடைக்கு பூட்டு போட வந்த இ.கம்யூ.கட்சியினர் போலீசாருடன் ஒருவரையொருவர் தாக்கியதால் பரபரப்பு.

சேலம். அக்.30–

சேலம் சீலநாயக்கன் பட்டியில் டாஸ்மாக் கடைக்கு பூட்டு போடும் போராட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும், போலீசாருக்கும் இடையே நடந்த தள்ளுமுள்ளு மோதலானது.

இதில் அதிகாரிகள் தலையிட்டு சமரசம் செய்தனர். சேலம் சீலநாயக்கன்பட்டி பைபாஸ் பகுதியில் தனியார் மருத்துவமனை எதிர் பகுதியில் 2 டாஸ்மாக் கடைகள் செயல்பட்டு வருகிறது. இது மருத்துவமனைக்கு வரும் மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. இதனால் 2 டாஸ்மாக் கடைகளையும் அகற்ற வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் அதிகாரிகளிடம் மனு அளிக்கப்பட்டது. அப்போது அதிகாரிகள், 2 கடைகளும் அகற்றப்படும் என உறுதி அளித்தனர். ஆனால் கடைகளை பலநாட்களாகியும் அகற்றவில்லை.

இந்நிலையில் நேற்று 2 டாஸ்மாக் கடைகளுக்கும் பூட்டு போடும் போராட்டம் அறிவித்தனர். அதன்படி இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் செல்வராஜ், மாநில நிர்வாக குழு உறுப்பினர் மோகன் ஆகியோர் தலைமையில் 40க்கும் மேற்பட்ட கட்சியினர் வந்தனர். இதையொட்டி துணை கமிஷனர் மகேந்திரன், உதவி கமிஷனர் பரவாசுதேவன், இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் ஆகியோர் தலைமையில் 50க்கும் மேற்பட்ட போலீசார் டாஸ்மாக் கடை முன்பு பேரிகார்டு போட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கம்யூனிஸ்ட் கட்சியினர் கடைகளை மூட வேண்டும் என கோஷங்கள் எழுப்பினர். மேலும் பூட்டு மற்றும் சங்கிலியுடன் டாஸ்மாக் கடைகளை நோக்கி முன்னேறி சென்றனர். போலீசார் அவர்களை தடுத்து நிறுத்தியதால் கடுமையான தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் கம்யூனிஸ்ட் கட்சியினரும்தாக்கப்பட்டனர்.

போலீசாருக்கும் அடி விழுந்தது. ஒரு கட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியினர் சீலநாயக்கன்பட்டி டவுன் சாலையின் இருபுறமும் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. துணை கமிஷனர் மகேந்திரன் மற்றும் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி மறியலை கைவிட வைத்தனர். இதையடுத்து மீண்டும் கடை முன் அமர்ந்து அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். இதனிடையே தாசில்தார் காந்தி தேசாய் மற்றும் டாஸ்மாக் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

''இன்னும் 15 நாட்களுக்குள் கடைகளை மூட நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தங்களுக்கு எழுத்து பூர்வமாக எழுதி கொடுக்கும்படி தெரிவித்து தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியினர் முற்றுகையில் ஈடுபட்டனர். இதையடுத்து அதிகாரிகள் எழுத்துப்பூர்வமாக அவர்களுக்கு எழுதி கொடுத்தனர். பின்னர் போக்குவரத்துக்கு இடையூறாக மறியலில் ஈடுபட்டதால் அவர்களில் 20 பேரை போலீசார் கைது செய்து வேனில் ஏற்றினர். இச்சம்பவத்தால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தினந்தோறும் படியுங்கள்
நீதி கதிர் எக்ஸ்பிரஸ்
காலை நாளிதழை

புதுச்சேரி கடற்கரை சாலையில் துருப்பிடித்திருந்த அலங்கார மின் கம்பம் விழுந்து வம்பாகீரப்பாளையத்தைச் சேர்ந்த சிறுவன் பஜல் வயது (7) உயிரிழந்தான்.. புதுச்சேரி மாநில அதிமுக செயலாளர், தற்காலிக சட்டப்பேரவை தலைவர் அன்பழகன் அவர்கள் அந்த குடும்பத்திற்கு நிவாரண உதவி வழங்க வேண்டும் என முதலமைச்சர் ரங்கசாமியை சந்தித்து கோரிக்கை வைத்தார். கோரிக்கையை ஏற்று உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு முதலமைச்சர் ரங்கசாமி அவர்கள் சட்டப்பேரவை அலுவலகத்தில் 5 லட்சம் ரூபாய்க்கான நிதி உதவியை வழங்கினார். இந்நிகழ்வின் போது தற்காலிக சட்டப்பேரவை தலைவர் அன்பழகன் அவர்கள் மற்றும் உயிரிழந்த சிறுவனின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

தொடர் மசூதி மீதான தாக்குதல் திட்டம் இட்ட சதியா ? காயல் அப்பாஸ் கடும் கண்டனம் !

காயல் பட்டிணம் அக் 30

கடந்த அக் 14ம் தேதி அன்று கோடம்பாக்கத்தில் உள்ள ஹமீதியா மசூதிக்குள் அத்து மீறி உள்ளே புகுந்து நிர்வாகிகள்மீதும் மசூதியின் உள்ளே இருக்கும் குரான் மற்றும் பொருட்கள் மீதான தாக்குதல் நடை பெற்றன. மேலும். அந்த பிரச்சனை இஸ்லாமியர்களின் மனதில் பட்டிருந்த இருந்த இந்த காயம் மறைவதற்குள் மீண்டும் கோயம் பேடு ஜெய் நகரில் அமைந்துள்ள மஸ்ஜித் இஷா நூர் மசூதிக்குள் அத்துமீறி புகுந்து இமாமை தாக்கி பொருட்களை சேத படுத்திய சம்பவம் இஸ்லாமியர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி வருகிறது.

இஸ்லாமியர்களின் வழிப்பாட்டு தளமான மசூதியை மட்டும் குறி வைத்து அத்துமீறி உள்ளே புகுந்து தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதை மக்கள் ஜனநாயக கட்சி மிகவும் வண்மையாக கண்டிக்கிறது. மேலும். வடமாநிலங்களில் மசூதியில் நடை பெறும் தொழுகை நேரம் பார்த்து இஸ்லாமியர்கள் மீதான வெறுப்பு பிரச்சாரம் செய்து வரும் கும்பல் அத்துமீறி உள்ளே புகுந்து தொழுகை நடத்த விடாலும் இமாம்களின் மிதும் தாக்குதல் போன்ற அராஜக செயலில் தொடர்ந்து ஈடு பட்டு வருகின்றனர்.

மேலும். அது போன்ற சம்பவம் தமிழகத்திலும் மசூதிகள் மீதான தாக்குதல் தொடர்ந்து நடை பெறுவதனால் தமிழகம் வட மாநிலமாக மாறி விடுமோ என்கிற அச்சத்தை ஏற்படுத்தி கிறது. மேலும். மசூதி மீதான தாக்குதல் நடத்திய நபர்கள் மது போதையிலும் மனநலம் பாதிக்க பட்டவர். என்று சொன்னாலும் இச்சம்பவத்தை ஒரு போதும் ஏற்று கொள்ள முடியாது. ஏனென்றால் ஒரு தனி நபர் பின் பலம் இல்லாமல் மசூதி உள்ளே அத்து மீறி புகுந்து தாக்குதல் நடத்த முடியாது.

மேலும். மசூத்திக்குள் அத்துமீறி உள்ளே புகுந்து அராஜகத்தில் ஈடு பட்டால் தமிழக முழுவதும் உள்ள இஸ்லாமியர்கள் கொந்தளித்து விடுவார். இதனால் சட்ட ஒழுங்கு பாதிக்க படலாம். தனது உயிருக்கும் கூட ஆபத்து வரலாம் என்பதை தெரியாமல் இச்சபவத்தில் இவ்வளவு துனிவாக ஈடு பட மாட்டார்கள். இதை எல்லாம் சம்பந்த பட்ட நபருக்கு நன்றாக வே தெரிந்து தான் மசூதிகளின் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். மசூதிகளின் மீது தொடர்ந்து தாக்குகுதல் நடத்தி வரும் சமூக விரோதிகளின் அடுத்த கட்ட திட்டம் என்ன.? பல்வேறு கோனத்தில் காவல்துறையினர் விசாரனையை மேற்கொள்ள வேண்டும். மேலும். இக்ககுற்றத்தில் கைது செய்பட்ட குற்றவாளிகளின் பின் பலமாக யாரேல்லாம் மூளையாக செயல் பட்டார்கள். என்பதை கண்டறிந்து அவர்கள் மீதும் சட்ட ரீதியாக கடும் நடவடிக்கை எடுத்தால்

மட்டுமே இது போன்று மசூதிகள் மீதான தாக்குதல் களை தடுக்க முடியும் .

மேலும். இது போன்று இனிமேல் மசூதிகள் மீதான தாக்குதல் நடை பெற்றால் தமிழக முழுவதும் அமைந்துள்ள அனைத்து மசூதிகளை பாதுக்க பட வேண்டும் என தமிழகம் முழுவதும் ஜனநாயக ரீதியான போரட்டங்களை இஸ்லாமியர்கள் முன் எடுத்து செல்ல வேண்டியது தான் வரும் ஏனென்றால் இஸ்லாமியர்கள் எதை வேண்டுமானாலும் கடந்து சென்று விடுவார்கள்.ஆனால் இஸ்லாமியர்களின் வழிப்பாட்டு தளங்கள் மீதான தாக்குதலை ஒரு போதும் ஏற்று கொள்ள மாட்டார்கள். என்பது அனைவருக்கு தெரிந்த ஒன்று தான். ஆகவே. தமிழகத்தில் இது போன்ற சம்பவங்கள் இனி மேல் நடை பெறாமல் தடுக்க அனைத்து விதமான நடவடிக்கைககளை காவல் துறை இயக்குனர் மகேஷ் குமார் அகர்வால் எடுக்க வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி வலியுறுத்துகிறது.

எனவே. அமைதி பூங்காவான தமிழகத்தில் மத கலவரத்தை தூண்டும் வகையில் திடீரென மசூதிக்குள் அத்து மீறி உள்ளே புகுந்து தாக்குதல் நடத்துகிறாகள் என்றால் இப்பிரச்சனையில் அரசியல் ஆதாயம் தேட ஒரு சிலர் முயற்ச்சிகிறார்களா என்கிற சந்தேகமும் எழுகிறது ? ஆகவே. இனி வரும் காலங்களில் மசூதிகள் தாக்க படாமலும் மத ரீதியான பிரச்சனைகள் ஏற்படாமலும் இருக்க தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் துரித நடவடிக்கைகளை உடனடியாக மேற் கொள்ள வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் சார்பில் வலியுறுத்தி கேட்டு கொள்கிறோம். இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்.

மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் காலியாக உள்ள உதவி வரவேற்பாளர் பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத், தகவல்.

சேலம். அக். 30–

சேலம் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் காலியாக உள்ள உதவி வரவேற்பாளர் பணியிடத்திற்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் க. இளம்பகவத், தெரிவித்துள்ளதாவது :

சேலம் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் 01.08.2023 முதல் காலியாக உள்ள உதவி வரவேற்பாளர் பணியிடம் Level-2 - ரூ.15,900 ரூ.50,400 என்ற ஊதிய விகிதத்தில் நிரப்பபடவுள்ளது. உதவி வரவேற்பாளர் பணியிடம் பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக முழுமையான பார்வையற்றவராக இருத்தல் வேண்டும் (VI-100 %), எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், 40 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும், நாற்காலி ஒயர் பின்னுதலில் ஒரு வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும், பொதுப்பிரிவு பெண் (General Turn - W) ஆகிய தகுதிகளின் அடிப்படையில் நிரப்பபடவுள்ளது.

தகுதி வாய்ந்த விண்ணப்பத்தாரர்கள் தங்கள் விண்ணப்பத்தினை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், அறை எண்:11, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சேலம் மாவட்டம் என்ற

முகவரியில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ 13.11.2026 மாலை 5.45 க்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், விவரங்களுக்கு 0427 2415242, 9499933489 என்ற எண்களில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் எதிர்காலத்துக்கு புதிய பாதை! ஆர்விஎஸ் கல்லூரியில் 'பிஸி சினர்ஜி உச்சி மாநாடு 2026'!

கோவை: அக்.30–

சூலூர் ஆர்விஎஸ் கலை அறிவியல் கல்லூரியில் 'அரேட் சர்க்கிள்' தொடக்க விழா மற்றும் 'பிஸி சினர்ஜி உச்சி மாநாடு 2026' நடைபெற்றது. கல்லூரி வளாகத்தில் உள்ள கலாம் அரங்கில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கல்வியாளர்கள், தொழில்துறை வல்லுநர்கள் மற்றும் மனிதவளத் துறை நிபுணர்கள் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் த. சிவகுமார் வரவேற் புரையாற்றினார். கல்லூரிச் செயலர் சாரம்மா சாமுவேல் தலைமையுரையாற்றினார். இதனைத் தொடர்ந்து, வி. சங்கரநாராயணன், ஜெயஸ்ரீ மற்றும் ராகுல் ஆகியோர் இணைந்து 'அரேட் சர்க்கிள்' அமைப்பைத் தொடங்கி வைத்தனர்.

ஈரோடு மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு தீபாவளி பரிசு.. 36 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பழனியப்பா நா. செந்தில்குமார் வழங்கி சிறப்பு..

ஈரோடு. அக். 30

வரும் தீபாவளி பண்டிகை முன்னிட்டு, ஈரோடு மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கும், பொது மக்களுக்கும் ஐந்தாவது ஆண்டாக, 36 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் பழனியப்பா நா. செந்தில் குமார் பரிசுகள் வழங்கினார்.

ஈரோடு மாநகராட்சியில் 60 வார்டுகள் உள்ளது. இங்கு தூய்மை பண்ணி உள்ளிட்ட பல்வேறு களப்பணிகளை தூய்மை பணியாளர்கள் செய்து வருகின்றார்கள்.

இதனைத் தொடர்ந்து அவர்களை கௌரவப்படுத்தும் வகையிலும், தீபாவளி பண்டிகைக்கு அவர்களுக்கு சிறப்பு சேர்க்கும் வகையிலும், ஈரோடு மாநகராட்சியின் 36 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினரான பழனியப்பா நா. செந்தில் குமார் ஆண்டுதோறும் அவர்கள் மரியாதை செலுத்தி கௌரவப்படுத்தும் வகையில், அனைத்து தூய்மை பணியாளர்களுக்கும், அசைவம் மற்றும் சைவ உணவளித்து, அவர்களையும் அவர்களின் குடும்பத்தாரையும் கௌரவப்படுத்தும் வகையில் தீபாவளி பண்டிகைக்கு சிறப்பு பரிசு பொருட்களை தொடர்ந்து கடந்த ஐந்து ஆண்டுகளாக வழங்கி வருகிறார்.

இந்த நிகழ்ச்சி ஈரோடு கோட்டை பகுதியில் உள்ள வாணிய வைசியர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இங்கு நடைபெற்ற இந்த விழாவில் தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர், ஈரோடு மாநகராட்சியின் அனைத்து துறை சார்ந்த பணியாளர்கள், வார்டு பொது மக்கள் என அனைவருக்கும் அசைவ மற்றும் சைவ உணவுடன் கூடிய சிறப்பான மதிய விருந்து வழங்கப்பட்டது.

பின்னர் அனைவருக்கும் தீபாவளி பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக இதுபோன்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து தூய்மை பணியாளர் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் மதிய உணவு வழங்கி சிறப்பான ஒரு தீபாவளி பண்டிகை பரிசு பொருட்களை ஆண்டுதோறும் 36 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பழனியப்பா நா. செந்தில்குமார் சிறப்பாக செய்து வருகிறார்.

இதனைத் தொடர்ந்து அவருக்கு ஈரோடு மாநகராட்சி தூய்மை பணியாளர்கள், அனைத்துதுறைபணியாளர்கள் வார்டு பொதுமக்கள் சார்பில் பொன்னாடை அணிவிக்கப்பட்டு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

போச்சம்பள்ளி அருகே நரி குட்டை நீர் வழிப்பாதை மீட்பு: 50 ஆண்டு காலப் பிரச்சினைக்கு தீர்வு கண்ட மாவட்ட ஆட்சியர் விவசாயிகள் மகிழ்ச்சி.

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த நல்லப்ப நாயக்கனூர் பகுதியில், சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்பாட்டில் இருந்த பாரம்பரிய நீர் வழிப்பாதை ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளது.

நல்லப்ப நாயக்கனூர் பகுதியில் உள்ள மலைகள் மற்றும் வயல்கள் வழியாகப் பெய்யும் மழைநீர், நரி குட்டைப் பகுதியில் சேர்ந்து, அங்கிருந்து நீர் வழிப்பாதை வழியாக சுமார் 1.5 கி.மீ தூரத்தில் உள்ள எர்ரங்குட்டை ஏரியைச் சென்றடைவது வழக்கம். ஆனால், நாளடைவில் இப்பாதை மண் மூடியதாலும், சிலர் ஆக்கிரமிப்பு செய்ததாலும் மழைநீர் ஏரிக்குச் செல்ல முடியாமல் தடைபட்டது.

இதையடுத்து, அப்பகுதி விவசாயிகள் மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமாரிடம் ஆக்கிரமிப்புகளை அகற்றி நீர் வழிப்பாதையைச் சீரமைக்க மனு அளித்தனர். மனுவைப் பரிசீலித்த ஆட்சியர், உடனடியாக நடவடிக்கை எடுக்க வருவாய்த் துறைக்கு உத்தரவிட்டார்.

அதன்பேரில், சம்பவ இடத்திற்கு வந்த வருவாய்த் துறை அதிகாரிகள் போச்சம்பள்ளி போலீசாரின் பாதுகாப்புடன் ஜேசிபி இயந்திரங்கள் மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்றி, நீர் வழிப்பாதையை முழுமையாகச் சீரமைத்தனர். இதனால் மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் மாவட்ட ஆட்சியருக்குத் தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.

திருவள்ளூர் அருகே 13 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்த இளைஞருக்கு 22 ஆண்டுகள் சிறை தண்டனை :

போக்சோ சிறப்பு நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு

திருவள்ளூர் அக் 30 : சென்னையை அடுத்த எண்ணூார் பகுதியைச் சேர்ந்தவர் ரவி மகன் பீட்டர்(22). கூலித் தொழிலாளியான இவர் கடந்த 2018ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் தனது வீட்டின் அருகே 13 வயது சிறுமியை அவரது பெற்றோர் வேலைக்கு சென்ற நேரத்தில் வீட்டிற்குள் புகுந்து பாலியல் வன்கொடுமை செய்தார்.

இதுகுறித்து சிறுமியின் தாயார் எண்ணூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.புகாரின்பேரில் வழக்குப் பதிவு செய்து மீட்டரை கைது செய்து சென்னை புழல் மத்திய சிறையில் அடைத்தனர். பின் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். திருவள்ளூர் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் இறுதி விசாரணை முடிந்து நேற்று நீதிபதி உமா மகேஸ்வரி தீர்ப்பு வழங்கினார்.

தீர்ப்பில் 13 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த பீட்டருக்கு பல்வேறு பிரிவுகளின் கீழ் 22 ஆண்டுகள் சிறை தண்டனையும் 25 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்.மேலும் பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்திற்கு ரூ.2 லட்சம் இழப்பீடு வழங்கவும் அரசுக்கு பரிந்துரை செய்தார்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

திருப்பூர் தமிழர் பாரம்பரியத்தை பறைசாற்றும் நோவா உலக சாதனை நடன நிகழ்ச்சி 108 பள்ளி மாணவர்கள் பங்கேற்பு

திருப்பூர்,அக்30

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அடுத்த இச்சிப்பட்டியில் உள்ள தனியார் (நவ பாரத் ராயல்) பள்ளியில், தமிழர்களின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரப் பெருமையை உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் 'Proud to Be a Thamizhan' என்ற தலைப்பில் நோவா உலக சாதனை நடன நிகழ்ச்சி நடைபெற்றது.

மாணவர்களிடையே தமிழர் பண்பாடு, கலை, கலாச்சாரம் மற்றும் ஒற்றுமை உணர்வை வளர்க்கும் உயரிய நோக்கில் இந்நடன நிகழ்ச்சி ஒருங்கிணைக்கப்பட்டது. இந்த சாதனை முயற்சியில், பள்ளி மாணவ மாணவிகள் 108 பேர் உற்சாகத்துடன் பங்கேற்றுத் தங்களது கண்கவர் நடனத் திறமையை வெளிப்படுத்தினர்.

தமிழரின் கலை வடிவங்களை ஒருங்கிணைத்து 108 மாணவர்கள் இணைந்து நிகழ்த்திய இந்த சாதனை நடனம் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்ததுடன், நோவா உலக சாதனைப் புத்தகத்திலும் இடம்பெற்று பாராட்டைப் பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பள்ளி நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவ மாணவிகள் திரளாகக் கலந்து கொண்டனர். சாதனை புரிந்த மாணவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு விரிவாக்கத்திட்டத்தின் கீழ் பயனடைந்த திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த மாணவ, மாணவிகள் தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்

தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் பொறுப்பேற்ற நாளிலிருந்து தமிழ்நாட்டின் கடைகோடி கிராம மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, பிற மாநிலங்கள் வியந்து பாராட்டும் வகையில், சிறப்பாக பணியாற்றி வருகிறார்.

அந்த வகையில் பள்ளி மாணவர்களின் நலன் மற்றும் கல்வியை மேம்படுத்துவதில் மிகவும் கவனமுடன் செயல்பட்டு வருகிறது. பள்ளி மாணவர்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்திடவும், மாணவியர்கள் பசியின்றிப் பள்ளியில் பயில்வதை உறுதி செய்திடவும், கல்வியில் முழுமையான கவனம் செலுத்திடவும் காலை உணவுத் திட்டத்தினை பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் என விரிவாக்கம் செய்து, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு கடந்த 22.09.2026 அன்று திருவான்மியூர் பகுதியில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் துவக்கி வைத்தார்.

இது குறித்து திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தெரிவிக்கையில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத்திட்டம் திருவள்ளூர் மாவட்டத்தில் 1 முதல் 5 வகுப்பு வரையிலும் படிக்கும் 55,789 மாணவர்களுக்கு காலை உணவு திட்டம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு கூடுதலாக 45,000 மாணவர்களுக்கு காலை உணவு திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆகமொத்தம் திருவள்ளூர் மாவட்டத்தில் 1473 பள்ளிகளில் 1,00,575 மாணவ, மாணவியர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. 15 வகுப்பு இல்லாமல் புதிதாக 68 வரைக்கும் 243 பள்ளிகளில் கூடுதலாக காலை உணவு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. தினமும் காலை 8 முதல் 8.30 க்குள் உணவு வழங்கப்படும். பொங்கல், கிச்சடி, ரவா உப்புமா, சாம்பார் ஆகியவை வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் மாணவர்களின் ஊட்டச்சத்து குறைபாடு நீங்கி உடல் ஆரோக்கியம் மேம் படுவதோடு, மாணவர்களின் வருகைப் பதிவும் கணிசமாக அதிகரிக்கும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வரும் சரிகா கூறுகையில், நான் நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு படிக்கிறேன். எனது அம்மா கூலி வேலைக்கு காலையிலேயே சென்று விடுவார். அதனால் காலை உணவு செய்து கொடுக்க முடியாத நிலை இருந்தது. இந்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் 1 ம்வகுப்பு முதல் 8ம்வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கும் பெருந்தலைவர் காமராஜர் உணவுத்திட்டத்தினை

விரிவாக்கம் செய்ததால், பள்ளிகளில் வழங்கப்படும் காலை உணவு மிகவும் உதவிகரமாக அமைகிறது. நான் பசியின்றி பாடம் கற்க முடிகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்திய தமிழ்நாடு முதல்வருக்கு என் போன்ற மாணவர்களின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

அதே போல் கோகுல் என்னும் மாணவர் தெரிவித்ததாவது : நான் நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு படிக்கிறேன். காலை வேளையில் அவசர அவசரமாகப்

பள்ளிக்கு கிளம்பும்போது பல நேரங்களில் சரியாக சாப்பிடாமல் பள்ளிக்கு சென்று இருக்கிறேன். ஆனால் தற்போது பள்ளி வளாகத்திலேயே சத்தான காலை உணவு கிடைப்பது எங்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக இருக்கிறது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்களுக்கு எனது சார்பிலும் எனது பெற்றோர் சார்பிலும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறினார்.

தொகுப்பு :
அஸ்வின் குமார்
செய்தி மக்கள் தொடர்பு
அலுவலர்
திருவள்ளூர் மாவட்டம்

கோவை சரவணம்பட்டி பகுதியில் நிலத்தை அபகரிக்க முயற்சி முன்னாள் நீதிபதி பரபரப்பு பேட்டி!

கோவை அக்:30

கோவை பத்திரிக்கையாளர் மன்றத்தில் ஓய்வு பெற்ற நீதிபதி கணேசன் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது.அதில் அவர் கூறியதாவது, கோவை அருகே உள்ள சரவணம்பட்டி தெய்வீக நகர் மனை பகுதியில் 1976 ம் ஆண்டு 96 பேர் 9.54.ஏக்கர் நிலத்தை 2 முதல் 5 சென்ட் வரை மனைகளாகப் பிரித்து வாங்கியுள்ளனர்.இந்த மனை பிரிவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

96 நில உரிமையாளர்களுக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. நிலத்தை கௌமார மடத்தை சேர்ந்த நபர் அபகரித்து அடுக்கு மாடி குடியிருப்பு, ஐ.டி.பார்க் கட்ட முயற்சி செய்வதாக தெரிகிறது.

தமிழக முதல்வர் ஜோசப் விஜய் ஏழைகளுக்கு உதவி செய்யும் என்று நாங்கள் வாக்களித்தோம். ஆனால் ஏழை மக்களை த.வெ.க.அரசு கைவிட்டு விட்டது.இது குறித்து அறநிலையத்துறை துறை அமைச்சர் ரமேஷ் அவர்களிடம் கேட்ட போது கௌமார மடாலயத்திற்கு வாக்கு கொடுத்து விட்டேன் என்றார்.ஏழை மக்களிடமிருந்து நிலத்தைப் பறிக்கும் முயற்சியைத் தடுத்து அவர்களின் நில உரிமையை பாதுகாக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

திருத்தணி மற்றும் செங்குன்றம் பகுதிகளில் அமைச்சர்கள் கே.ஏ.செங்கோட்டையன், பி.வெங்கட்ராமணன் ஆகியோர் திடீர் ஆய்வு :

திருவள்ளூர் அக் 30 :

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம் பொன்பாடி சோதனை சாவடியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் பி.வெங்கட்ராமணன் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் ச.கவிதா முன்னிலையில் பிற மாநிலங்களில் இருந்து நெல் ஏற்றி வரும் வாகனங்களை பரிசோதனை செய்வது தொடர்பாகவும், பராமரிக்கப்படும் பதிவேடுகளையும் ஆய்வு செய்து விபரங்களை கேட்டறிந்து, வாகனங்களை எவ்வித இடையூறுமின்றி செல்லும் வகையில் போக்குவரத்தை முறைபடுத்தி கண்காணித்து விழிப்புடன் பணியாற்ற சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டனர்.

மேலும், செங்குன்றம் நாரவாரிகுப்பம் பழைய பேருந்து நிலையம் தற்காலிக நெல் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் மற்றும் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் ஆந்திரா, தெலுங்கனா, ஒரிசா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட ஊர்திகளையும், நெல் தரம் உள்ளிட்ட விபரங்களை கேட்டறிந்து, ஓட்டுநர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல் அரிசி வணிகர்களிடமும் விபரங்களை கேட்டறிந்து, இடர்பாடுகளையும் வண்ணம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர்.

இதில் திருத்தணி கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சுபம் திமன், செங்குன்றம் காவல் துணை ஆணையர் மகேஸ்வரி, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் ராமகிருஷ்ணன், செங்குன்றம் காவல் உதவி ஆணையர் ரூபன், திருத்தணி வட்டாட்சியர் செந்தில், நாரவாரிகுப்பம் செயல் அலுவலர் பாஸ்கரன், பொன்னேரி வட்டாட்சியர் ஜெய்கர் பிரபு மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்கம் சார்பில் அரசு மேல்நிலைப் பள்ளியில் சிறப்பு உரையரங்கம்

வந்தவாசி, அக் 30:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த மழையூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்கம் சார்பில் 'இன்றைய இளைய சமுதாயத்தில் தமிழ் மொழியின் பங்கு' என்ற தலைப்பில் சிறப்பு உரையரங்கம் நடைபெற்றது. தமிழ் மன்றம் சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு தமிழ்ச் சங்க தலைவர் பீ.ரகமத்துல்லா தலைமை தாங்கினார். பள்ளி தலைமை ஆசிரியர் சு.எழில், சங்க செயலாளர் பா.சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதுகலை ஆசிரியை செல்வ சுகன்யா வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, மாவட்ட அரிமா சங்க தலைவரும், தன்னம்பிக்கை பயிற்சியாளருமான இரா.சரவணன் பங்கேற்று, இன்றைய இளைய சமுதாயத்தில் தமிழ் மொழியின் பங்கு என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். மேலும் பல மொழிகளை கற்றாலும் தமிழ் மொழியை நாம் போற்றி காக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும் தாய்மொழியை மாணவர்கள் அதிகம் நேசிக்க வேண்டும் என்று கூறினார். மேலும் ஒழுக்கத்துடன் கூடிய கல்வியே சிறந்தது என்று வலியுறுத்தினார். இந்த நிகழ்வில் சங்க துணைத் தலைவர் எ.தேவா, பள்ளி முதுகலை ஆசிரியர் மணிகண்டன், தீபன் சக்ரவர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு புத்தக பரிசுகள் வழங்கப்பட்டது. இறுதியில் சங்க பொருளாளர் சீ.கேசவராஜ் நன்றி கூறினார்.

மாற்றுத்திறனாளி இளைஞர் தினேஷ்க்கு பணி நியமன ஆணையை வழங்கினார் முதலமைச்சர் விஜய்!

சென்னை: அக்.30–

நேற்று முதலமைச்சர் விஜயை சந்தித்து வேலை வாய்ப்பு கோரியிருந்தார் மாற்றுத்திறனாளி இளைஞர் தினேஷ்; திருவொற்றியூர் அரசினர் ஐடிஐஇல் Workshop Assistant பணிக்கான பணி நியமன ஆணையை முதலமைச்சர் வழங்கினார்.

சேலம் அரசு மருத்துவமனையில் அடுக்குமாடி டூவீலர் பார்க்கிங் வசதியை ஏற்படுத்த பொதுமக்கள் கோரிக்கை.

சேலம். அக்.30

சேலம் அரசு மருத்துவமனையில் அடுக்குமாடி டூவீலர் பார்க்கிங் வசதியை ஏற்படுத்தி தர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையானது பல்வேறு துறைகளுடன் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இதன் காரணமாக, சேலம் மாவட்டம் மட்டுமின்றி தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்தும் அதிகளவில் சிகிச்சைக்கு வருகின்றனர். நாள்தோறும் புறநோயாளிகள் பிரிவில் சராசரியாக 4000 பேரும், உள்நோயாளிகள் பிரிவில் 1500க்கும் மேற்பட்டவர்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மருத்துவ சிகிச்சைக்கு வரும் பொதுமக்கள், மருத்துவமனையின் அம்மா உணவகம், பழைய புறநோயாளிகள் பிரிவு, மகப்பேறு மருத்துவத்துறை, சூப்பர் ஸ்பெஷாலிட்டி கட்டிடம் முன்புள்ள காலியிடங்களில் டூவீலர்களை நிறுத்திவிட்டு செல்கின்றனர். அங்கு போதிய இடம் இல்லாதபோது, டூவீலர்களை மருத்துவமனையில் ஆங்காங்கே சாலையோரம் நிறுத்தி விட்டுச்செல்கின்றனர். இதனால் ஆம்புலன்ஸ் எளிதில் வந்து செல்ல முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. அதேபோல், ஓரிடத்தில் டூவீலர் பார்க்கிங் வசதி இல்லாததால் தொடர்ச்சியாக டூவீலர் திருட்டு சம்பவங்களும் நடந்து வருகிறது.

இதுகுறித்து பொதுமக்கள் கூறுகையில்,"சேலம் அரசு மருத்துவமனையில் டூவீலர்களை நிறுத்த முறையான பார்க்கிங் வசதி இல்லை. இதனால் பார்க்கும் இடங்களில் எல்லாம் டூவீலர்களை நிறுத்திவிட்டு செல்லும் நிலை உள்ளது. மருத்துவமனை வளாகத்தில் ஆங்காங்கே டூவீலர்களை நிறுத்தி விட்டு செல்வதால், மர்ம நபர்கள் தொடர்ச்சியாக திருடிச்செல்லும் சம்பவங்கள் நடக்கிறது. பொதுமக்களின் நலன்கருதி, சேலம் அரசு மருத்துவமனையில் அடுக்குமாடி வாகன நிறுத்துமிடம் (மல்டிலெவல் டூவீலர் பார்க்கிங்) அமைக்க வேண்டும். ஓரிடத்தில் டூவீலர் பார்க்கிங் அமைத்து, வாகன ஓட்டிகளுக்கு குறைந்த கட்டணத்தில் டோக்கன் வழங்குவதன் மூலம், வாகன திருட்டை முற்றிலும் தடுக்க முடியும்,"என்றனர்.

திருவள்ளூர் அருகே வீட்டில் புகுந்து மர்ம நபர் திருடும் வீடியோ சிசிடிவி கேமராவில் பதிவு நகை திருடிய இளைஞரை ஒன்றரை மணி நேரத்தில் கைது செய்த போலீசார்

திருவள்ளூர் அக் 30 :

திருவள்ளூர் அடுத்த மப்பேடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பேரம்பாக்கம் நந்தா நகர் பகுதியைச் சேர்ந்தவர் ஏழுமலை மகன் தர்மேந்திரன் (28). இவர் மப்பேட்டில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறார். இவர் தனது வீட்டில் சிசிடிவி கேமரா பொருத்தியுள்ளார். அதன் காட்சிகளை செல்போனில் பார்க்கும் வசதியையும் ஏற்படுத்தி வைத்திருந்தார்.

இந்நிலையில் வழக்கம் போல் வேலைக்கு சென்றிருந்த தர்மேந்திரன் பிற்பகல் 1.30 மணியளவில் இவரது வீட்டில் மர்ம நபர் புகுந்து திருடும் காட்சிகள் சிசிடிவியில் பதிவானதை செல்போனில் பார்த்துள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்து உடனடியாக மப்பேடு போலீசில் தர்மேந்திரன் சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் புகார் கொடுத்தார்.

புகாரின் பேரில் மப்பேடு இன்ஸ்பெக்டர் வினாயகம் மற்றும் சப் இன்ஸ்பெக்டர் சுரேஷ் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சிசிடிவியில் பதிவான காட்சிகளைக் கொண்டு விசாரணை செய்தனர். விசாரணையில், பேரம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த வேலு மகன் தீபன் (19) என்பவன் இந்த திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்தது. இதனையடுத்து விரைந்து சென்று தீபனை கைது செய்து அவனிடமிருந்து 1 சவரன் தங்க நகையை பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

வீட்டில் சிசிடிவி கேமராவை பொருத்தியதோடு மட்டுமல்லாமல் அதை செல்போனில் பார்க்கும் வசதியையும் ஏற்படுத்தி வைத்திருந்ததால் திருட்டு சம்பவம் நடந்த உடன் புகார் கொடுத்து ஒன்றரை மணி நேரத்தில் குற்றவாளியை கைது செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421, 9750589992